மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நன்னிலம்.

**முன்னிலை :- திரு.எம்.ஜெகதீசன், பி.எஸ்ஸி, எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், நன்னிலம்.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ஆம் நாள் புதன்கிழமை.

திருவள்ளுவராண்டு 2050, விளம்பி வருடம் தைத்திங்கள் 23-ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.50/2013**

சாம்பசிவம் பிள்ளை ... வாதி

// எதிர் //

1. அரவிந்தம்
2. தர்மதேவி
3. கனகரெத்தினம் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 25.12.2019ஆம் தேதியன்று வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.பாரி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் கேட்கப்பட்ட வாதுரைகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனைசெய்தும், இதுநாள்வரையில் என் சீரிய பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்....

**//தீர்ப்புரை//**

வாதியின் குத்தகை சாகுபடி அனுபவத்தில் உள்ள வழக்குச்சொத்தில் வாதியின் அனுபவம் சட்டப்படியாக நீக்கப்படும் நாள்வரையில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென ஒரு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம்

வழங்கி உத்தரவிடக்கோரியும், வழக்கிற்குண்டான செலவுத்தொகை கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி தாக்கல் செய்த வழக்குரை மற்றும் பதில் வழக்குரையின் சுருக்கம் :-

வழக்குச்சொத்து பிரதிவாதிகளின் தகப்பனார் சண்முகம் என்பவருக்கு சொந்தமாக இருந்தது. அதற்குமுன்பு சண்முகம்பிள்ளையின் தகப்பனார் ரெத்தினம்பிள்ளை என்பவருக்கு சொந்தமாக இருந்தது. வாதி, வாதி தகப்பனார் சுந்தரேசன்பிள்ளை, வாதியின் தாத்தா மருதபிள்ளை ஆகியோர் வழியாக தொடர்ந்து வழக்குசொத்துக்களும், வேறுசொத்துக்களும் 3 தலைமுறையாக குத்தகைசாகுபடியில் இருந்துவருகிறது. 10.06.1973 அன்று வாதி பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் குத்தகை சாகுபடியாளர் சட்டத்திற்கு உட்பட்டு குத்தகை சீட்டு ஒன்று எழுதிக்கொடுத்துள்ளார். எனவே குத்தகையாளர் பாதுகாப்பு சட்டம் 24/55ன் பலன்கள் வாதிக்கு உண்டு. வாதி 68 கலம்தான் வருடம் ஒன்றுக்கு நெல் அளக்க வேண்டும் என ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் தாய்மாமன் என்ற உறவுமுறை கருதி அதிகமாக நெல் அளப்பதும் வழக்கமாக இருந்தது. வாதியிடம் வழக்கில் சேராத மூன்றாம் நபர் தாவா சொத்தான குத்தகை சாகுபடி நிலத்தில் பிரச்சினை செய்ததன் காரணமாக வாதி மூன்றாம்நபர் மீது அப்போது அதிகார வரம்பு உள்ள திருவாரூர் முன்சீப் கோர்ட்டில் அசல் வழக்கு எண்.119/77 என்ற வழக்கிட்டு அதில் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை வாதிக்கு சாதகமாக வழங்கப்பட்டதை காண்பிக்க அந்த உத்தரவின் சான்றிட்ட நகல் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. 28.02.1976-ல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் நெல் அளந்ததற்கு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி குத்தகை நிலத்தினையும், மற்ற நிலங்களையும் வைத்து விவசாய லோன் வாங்கியுள்ளார். அரசு வழங்கிய நிவாரணம், மான்யம் அனைத்தையும் வாதிதான் தொடர்ந்து பெற்று வருகிறார். இன்ஷ்யூரன்ஸ் தொகையினை வாதியே செலுத்தி வருகிறார். பிரதிவாதிகளின் தகப்பனார் காரைக்கால் கொம்யூனை சேர்ந்த திருநள்ளாறு கிராமத்தில்தான் குடியிருந்து வந்தார். அவரிடம் எந்த காலத்திலும் வழக்குச்சொத்து பண்ணை சாகுபடியில் இருந்ததில்லை. வாதி தனக்குசொந்தமான வேறு அருகில் உள்ள சொத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் இலவச மின்சாரம் பெற்று அதன்

அடிப்படையில் தண்ணீர் பெற்று வழக்குசொத்தினையும் சாகுபடி செய்து வருகிறார். சுமார் 30வருடங்களுக்கு முன்பாகவே பிரதிவாதிகளின் தகப்பனார் சண்முகம்பிள்ளை இறந்துவிட்டார். தற்சமயம் விவசாய நிலங்கள் வீடுகட்டும் மனைநிலங்களாக மாற்றப்படுகிறது. எனவே பிரதிவாதிகள் வாதியிடம் வழக்குச்சொத்தினை விட்டுக்கொடுக்கவும், வழக்குச்சொத்தினை வீட்டு மனைகளாக மாற்றப்போவதாகவும், வழக்குச்சொத்தினை ஆக்கிரமித்து எடுத்துக்கொள்ளப்போவதாகவும் மிரட்டி வருகின்றனர். பிரதிவாதிகள் பணபலம் மற்றும் ஆள்பலம் மிக்கவர்கள். எவ்வாறேனும் சொத்தினை விற்று பணத்தினை அடையவேண்டும் என வாதியினை அப்புறப்படுத்த பிரதிவாதிகள் முயற்சி செய்கின்றனர். பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்தபிறகு குத்தகை நெல்லுக்குரிய தொகையினை 1ம் பிரதிவாதி அரவிந்தத்திடம் வாதி கொடுத்துவந்துள்ளார். 3 வருடகாலமாக நெல்லுக்குரிய தொகையினை வாதி நேரில் சென்று கொடுத்தபோது பிறகு வாங்கிக்கொள்வதாக கூறி 1ம் பிரதிவாதி திருப்பி அனுப்பிவிட்டார். எனவே வழக்குச்சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடும் என வாதி அஞ்சுவதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்

வழக்குச்சொத்துக்கள் மூன்று தலைமுறையாக வாதியின் குத்தகை சாகுபடியில் இருந்து வருகிறது என்பது உண்மை அல்ல. வாதி 11.05.1969ல் தான் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு குத்தகை சீட்டு எழுதிக்கொடுத்திருந்தார். 10.06.1973ம் குத்தகை சீட்டு மோசடியாக வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது. வாதிக்கு குத்தகை பாதுகாப்புச்சட்டம் 24/55ன் பலன்கள் கிடைக்கக்கூடியதது அல்ல. அசல் வழக்கு எண்.119/77 என்ற திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது சம்மந்தமாக பிரதிவாதிக்கோ அவர் தகப்பனாருக்கோ தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் பாண்டிச்சேரி மாநிலம் திருநள்ளாரில் வசித்து வந்தார். அப்பொழுது வழக்கு கிராமத்தில் இருந்து அறுவடைக்கு பின் நெல் எடுத்து செல்வது வழக்கம். அதற்கு வட்ட வழங்கு அலுவலரிடம் பர்மிட் பெற்று அனுப்பப்படவேண்டும்.

அதற்கு மனு எழுதுவதற்கு வெற்றுத்தாள்களில் செய்துகொடுத்த கையெழுத்தினை பயன்படுத்தி 28.02.1976ம் தேதியிட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. வாதி பிரதிவாதிகளுக்கு தெரியாமல் பிரதிவாதிகள் வாதியிடம் வைத்திருந்த நம்பிக்கையை மோசடி செய்யும் எண்ணத்தில் அரசு அலுவலர்கள் உதவியுடன் விவசாயக்கடன் பெற்றுள்ளதாக தெரிகிறது. வாதி தாவா கிராமத்தில் பெரிய மிராசுதாரர் ஆவார். வாதி 01.07.1969ல் வழக்குச்சொத்துக்களை குத்தகை சாகுபடி செய்யமுடியவில்லை என்று பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு சரண்டர் செய்து கொடுத்துள்ளார். பிறகு பிரதிவாதியின் தகப்பனார் வசம் எடுத்துக்கொண்டு வாதியிடம் கூறி வருடாவருடம் சாகுபடிக்குரிய தொகைகளை பெற்றுக்கொண்டு வாதி சாகுபடி செய்து, அறுவடையின்போது பிரதிவாதி குடும்பத்தார் செலவு போக பாக்கியுள்ள நெல்லை விற்று அடைந்துவந்தார்கள். வழக்குச்சொத்துக்களை சரண்டர் செய்து கொடுத்தபிறகு பிரதிவாதிகளின் தகப்பனார் சாகுபடி காலங்களிலும், அறுவடை காலங்களிலும் தாவா கிராமத்தில் உள்ள வாதியின் வீட்டிலேயே தங்கி சாகுபடி, அறுவடை ஆகியவைகளை செய்து வந்தார். வாதி கடந்த வருடம் பிரதிவாதி வருவதற்கு முன்பே அறுவடை செய்து நெல்லை விற்றுவிட்டார். தொகையையும் கையடக்கம் செய்துள்ளார். வாதி கடந்த பிப்ரவரி மாதம் 2013 மாதத்தில் வழக்குச்சொத்துக்களை தான் சொல்லும் விலைக்கு பிரதிவாதிகள் விற்கவேண்டும் என்றும், தான் மனைப்பிரிவுகளாக விற்கப்போவதாகவும் அதற்கு ஒப்புக்கொண்டு உடன்படிக்கை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் குத்தகை பாத்தியம் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்யப்போவதாக மிரட்டினார். வாதி 1969லேயே சரண்டர் எழுதிக்கொடுத்ததை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த மேற்பார்வை பொறுப்பும் இந்த எதிர்வழக்குரை மூலம் ரத்து செய்யப்படுகிறது. வழக்குச்சொத்துக்கள் பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்ற முறைமையில் அவர்களது அனுபவத்தில் உள்ளது. பிரதிவாதிகள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்ட வயதான பெண்கள். வழக்குமூலம் பொய்யானது. வாதி உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர

உரிமையில்லை. எனவே வாதியின் வழக்கினை சிறப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

(Whether the plaintiff is entitled to Permanent Injunction as prayed for?)

2. வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் யாவை?

(To what other reliefs the plaintiff is entitled to?)

<u>கூடுதல் எழுவினா 3</u>

வாதி தாவாவில் கோரியுள்ளபடி குத்தகைசாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பரிகாரம் பெறத்தக்கவரா?

(Whether the plaintiff is entitled to get protection under cultivating tenant?)

5. இந்த வழக்கில் வாதி தரப்பில் வாதி சாம்பசிவம் வா.சா.1 ஆகவும், பக்கிரிசாமி வா.சா.2 ஆகவும், மணி என்பவர் வா.சா.3 ஆகவும், சச்சிதானந்தம் வா.சா.4 ஆகவும், சுப்பையன் வா.சா.5 ஆகவும், ஜி.பாலாஜி என்பவர் வா.சா.6 ஆகவும், ராஜேஸ்வரி என்பவர் வா.சா.7 ஆகவும், நடராஜன் என்பவர் வா.சா.8 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தர்மதேவி என்பவர் பி.சா.1 ஆகவும்,. செல்வகுமார் என்பவர் பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.21 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. எழுவினா 1 மற்றும் கூடுதல் எழுவினா 3க்கான தீர்வு

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வழக்குச்சொத்து வாதியிடம் மூன்று தலைமுறைகளாக குத்தகை சாகுபடியில் இருந்து வருகிறது என்றும், 10.06.1973ல் வாதி பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் சட்டத்திற்கு உட்பட்டு குத்தகைசீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதி தனக்குசொந்தமான வழக்குச்சொத்திற்கு அருகில் உள்ள ஆழ்குழாய் கிணறுமூலம் இலவச மின்சாரம் பெற்று வழக்குச்சொத்தினையும் சாகுபடி செய்து வந்துள்ளார் என்றும், பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்தபிறகு குத்தகை நெல்லுக்குரிய தொகையினை வாதி 1ம் பிரதிவாதி அரவிந்தத்திடம் கொடுத்துவந்துள்ளார் ஆனால் 1ம் பிரதிவாதி அரவிந்தம் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும், வாங்கிய தொகையினை மனசாட்சிக்கு விரோதமாக வாங்கவில்லை என சாட்சி சொல்ல இயலாது என்றும், வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், வழக்கு பதிந்து நான்கு மாதம் கழித்தே எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்வழக்குரை பத்தி 8ல் வாதி மேற்பார்வையாளர் என்ற முறையிலேயே வழக்குசொத்தை கவனித்து வந்தார் என்று சொல்லப்படுகிறது என்றும், ஆனால் குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாக கூறப்படவில்லை என்றும், எனவே வழக்குச்சொத்தில் வாதியின் அனுபவம் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், பி.சா.1 தனது குறுக்குவிசாரணையில் வாதியின் வழக்கை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதியின் தகப்பனார் ஓய்வுபெற்ற இராணுவவீரர் என்றும், அவர்கள் வாரிசுகள் யாரும் விவசாயம் செய்யவில்லை என்றும், பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த குத்தகைசீட்டில் உள்ள கையெழுத்து வாதியின் கையெழுத்து என்று பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.8, 9, 10 ஆகிய மின் அட்டைகள் சாம்பசிவம் பெயரில்தான் உள்ளது என்றும், இளநிலைமின் பொறியாள சாட்சியமாக விசாரிக்கப்பட்டு மின்இணைப்பு பி.சா.ஆ.6, பி.சா.ஆ.8 ஆவணங்கள் புல எண்.111/3க்கு தான் இணைப்பு பெற்றதாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவாசொத்து

வாதியின் குத்தகைசாகுபடியின் கீழ் வாதியின் அனுபவத்தில் உள்ளதால் வாதியே குத்தகை சாகுபடியாளர் என்று கீழ்கண்ட முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிட்டார்

1.2009-5-L.W.883

2. 1985 (1) MLJ 175 Ratnam J

3. 1988 (1) LW 194

7.வாதி தரப்பில், 10.06.1973ம் தேதியிட்ட குத்தகைப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், திருவாரூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.119/77ல் இடைமனு எண்.614/77ன் உத்தரவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி வழக்கின் வழக்குப்பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆகவும், பிரதிவாதிகளின் தகப்பனார் 28.02.1976ல் வாதி நெல் அளந்ததற்காக கொடுத்த ரசீதின் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்திற்கு வாதி செலுத்திய கிஸ்தி ரசீது வா.சா.ஆ.5 ஆகவும், வாதிக்கு கொடுக்கப்பட்ட விவசாயக்கடன் அட்டையின் அசல் வா.சா.ஆ.6, வட்டாட்சியரின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், திருநள்ளார் கொம்யூன் பஞ்சாயத்தில் வழங்கப்பட்ட ஷண்முகம்பிள்ளையின் இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.8 ஆகவும், வாதியின் பெயரில் உள்ள மின்கட்டண அட்டை வா.சா.ஆ.9 மற்றும் வ.சா.ஆ.10 ஆகவும், வாதி பெயரில் உள்ள மின்கட்டண அட்டையின் கணினியில் எடுக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 11.03.2013ல் வாதி எழுதிய பதிவு செய்யப்படாத உயில் வா.சா.ஆ.12 ஆகவும், வாதி தரப்பில் வட்டாட்சியர், நன்னிலம் கிராம நிர்வாக அலுவலர், வாழ்க்கை ஆகியோருக்கு அனுப்பிய அறிவிப்பின் கை நகல் வா.சா.ஆ.13 ஆகவும், அதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.14 ஆகவும், குறியிடப்பட்டுள்ளது

8. மாறாக பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணம் 1977ம் வருடத்தில் ஏற்பட்டது அல்ல என்றும், 28.02.1976ல் வாதி நெல் அளந்ததற்காக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரசீது வா.சா.ஆ.4 மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும்,

குத்தகை சாகுபடியாளர் சட்டம் பிரிவு 6ன் கீழ் வாதியின் வழக்கானது உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்வு காண தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தான் குத்தகைசாகுபடியாளர் என்று தடைஉறுத்துக்கட்டளை கோர அருகதையற்றவர் என்றும், வா.சா.1 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும் குத்தகைதாரர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 6ன் படி சிவில் நீதிமன்றத்திற்கு இந்த வழக்கினை விசாரிக்க அதிகாரம் இல்லை என்றும், வாதி குத்தகை சாகுபடியாளர் சட்டம் பிரிவு 2 (aa) (cultivating tenant Act 1955) கீழ் வரவில்லை என்றும், அவருக்கு மேற்படி சட்டப்படி எந்த பாதுகாப்பும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், வாதிக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் வாதிட்டு பிரதிவாதிகள் தரப்பில் கீழ்கண்ட முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிட்டார்.

1. (2003) 1 M.L.J. 447

2. (2013) 4 (MLJ)

3. 2003) 3 (l.W.)

4. 2012) 3 L.W.

5. 2013 (1) (CTC)

9. பிரதிவாதிகள் தரப்பில் 15.02.1968ல் ஷண்முகம்பிள்ளைக்கு சாம்சிவம் பிள்ளை எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டில் உள்ள எழுதியவரின் கையெழுத்து பி.சா.ஆ.1 ஆகவும், 11.05.1969ல் ஷண்முகம்பிள்ளைக்கு சாம்சிவம் பிள்ளை எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டு பி.சா.ஆ.2 ஆகவும், 12.07.1969ல் வாதி எழுதிக்கொடுத்த சரண்டர் பத்திரம் பி.சா.ஆ.3 ஆகவும், 15.02.1968ம் தேதியிட்ட குத்தகைச்சீட்டில் உள்ள வாதியின் கையொப்பம் பி.சா.ஆ.4 ஆகவும், 15.02.1968ம் தேதியிட்ட குத்தகைசீட்டு ஆவணம் பி.சா.ஆ.5 ஆகவும், 12.04.2013ம் தேதியிட்ட சிட்டா நகல் பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆகவும்,

அடங்கல் பதிவேட்டு நகல் பி.சா.ஆ.8 ஆகவும், 05.11.2013ல் நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட மனுவும் அதற்கான ரசீதும் பி.சா.ஆ.9ஆகவும், அதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.10 ஆகவும், 21.02.2014 தேதியிட்ட மாவட்ட ஆட்சியருக்கு பதிவு தபாலில் அனுப்பிய கடிதம் அதற்கான பதிவு அஞசல் ரசீது பி.சா.ஆ.11 ஆகவும், அதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.12 ஆகவும், 13.06.2014ம் தேதியிட்ட வட்டாட்சியர் அனுப்பிய மேலெழுத்து பி.சா.ஆ.13 ஆகவும், 02.04.2014ம் தேதிய வில்லங்க சான்று பி.சா.ஆ.14 ஆகவும், 16.04.2014ம் தேதிய சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று பி.சா.ஆ.15 ஆகவும், 02.04.2014, 16.04.2014, 16.04.2014 ஆகிய தேதிகளிலான வில்லங்க சான்றிதழ்கள் பி.சா.ஆ.16, 17, 18 ஆகவும், மின் இணைப்பு விவரம் குறித்து இணையதளத்தில் எடுக்கப்பட்ட நகல் பி.சா.ஆ.19 ஆகவும், 27.12.1906-ல் பிரதிவாதியின் தகப்பனாரின் பிரஞ்சுமொழி பிறப்புச்சான்றிதழ் பி.சா.ஆ.20 ஆகவும், பிறப்புச்சான்றிதழ் பிரஞ்சுமொழியில் உள்ளதால் அதற்கான நோட்டறிபப்ளிக்கின் தமிழாக்கம் பி.சா.ஆ.21 ஆகவும் குறியிடப்பட்டுள்ளது.

10. வாதி தரப்பில் வழக்குச்சொத்து குத்தகை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வாதியின் குத்தகை அனுபவத்தில் உள்ளதாக கூறப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பில் வாதி 1969லேயே குத்தகையை சரண்டர் எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், அதன்பின்னர் மேற்பார்வையாளர் என்ற முறையில்தான் தாவா நிலத்தினை பார்த்து வந்தார் என்றும், வாதி குத்தகை சாகுபடியாளர் அல்ல என்பதாகும். எனவே வாதி குத்தகைசாகுபடியாளரா? அவர் குத்தகை சாகுபடியாளர் பாதுகாப்புச்சட்டம் (Tamil Nadu Cultivating Tenant Protection Act) கீழ் பரிகாரம் பெறத்தக்கவரா? இல்லையா என்பது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய சங்கதியாகும்.

11. பிரதிவாதிகளின் தகப்பனார் வாதியின் மாமா என்பதும், இருதரப்பினரும் நெருங்கிய உறவினர்கள் என்பதும், வழக்குச்சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

12. வாதி தரப்பில், 10.06.1973ம் தேதியன்று பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் குத்தகை சீட்டு எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது. வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள குத்தகைப்பத்திரம் 10.06.1973ல் பிரதிவாதிகளின் தகப்பனார் சண்முகம் என்பவரிடம் சட்டப்படியாக வாதி குத்தகைதாரர் என பதிவு செய்துகொண்டதாக உள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் 28.02.1976ம் தேதியன்று பிரதிவாதிகளின் தகப்பனார் 70 கலம் குத்தகைநெல் பெற்றுக்கொண்டு வழங்கிய ரசீது ஆகும்.

13. பிரதிவாதிகள் தரப்பில் 10.06.1973ம் தேதி வா.சா.ஆ.1 குத்தகைப்பத்திரம் ஒரு போலியான ஆவணம் என்றும், வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றும், 11.05.1969ல் தான் வாதி, பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு குத்தகை சீட்டு எழுதிக்கொடுத்திருந்தார் என்றும், 01.07.1969ல் வாதி வழக்குச்சொத்துக்களை தன்னால் குத்தகைசாகுபடி செய்ய முடியவில்லை என சரண்டர் செய்துள்ளார் என்பதாகும். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.3 ஆக குறியிடப்பட்டுள்ளது. அதன்பிறகு பிரதிவாதிகளின் தகப்பனார் வழக்குச்சொத்துக்களை வசம் எடுத்துக்கொண்டு வாதி ஏஜெண்ட் என்ற முறையில் நிர்வாகம் செய்ய வாதியிடம் கூறி வருடாவருடம் சாகுபடிக்குரிய தொகைகளை வாதி பெற்றுக்கொண்டு, வாதி சாகுபடி செய்து அறுடையின்போது பிரதிவாதி குடும்பத்தார் செலவு போக பாக்கியுள்ள நெல்லை விற்று அடைந்துவந்ததாகவும், வழக்குச்சொத்துக்களை வாதி சரண்டர் செய்து கொடுத்தபிறகு பிரதிவாதிகளின் தகப்பனார் சாகுபடி காலங்களிலும், அறுவடை காலங்களிலும் தாவா கிராமத்தில் உள்ள வாதியின் வீட்டிலேயே தங்கி சாகுபடி, அறுவடை ஆகியவைகளை கவனித்து வந்ததாக பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை சங்கதியாக உள்ளது. மேலும் பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்தபிறகும் வாதி ஒரு கோர்டேக்கராக இருந்து பிரதிவாதிகளின் மேற்பார்வையாளராக செயல்படுவதாகவும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை சங்கதியாகும். ஆனால் பிசா.1 ஆன 2ம் பிரதிவாதி பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார்.

"1968ல் நான் ஆசிரியர் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். என் சகோதரி 1ம் பிரதிவாதியும் ஆசிரியர் பணியில்தான் இருந்தார். 01.07.1969ம் தேதியிட்ட பி.சா.ஆ.3 பத்திரம் நான் படித்து பார்த்தவகையில் பார்த்தேன் என்றால் சரிதான். அதைப்பற்றி என் அப்பாவும் நேரடியாக சொல்லியுள்ளார். என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் பிரமாணப்பத்திரத்தில் தாவா சொத்தை வாதியின் தகப்பனாரும் அவருக்குப் பிறகு அவரது சகோதரர்களும் சாகுபடி செய்து உள்ளார்கள் என்றால் சரிதான்."

14. ஆசிரியராக உள்ள பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி குடும்பத்தார் வயலில் இறங்கி வேலைசெய்ததாக பிரதிவாதம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையிலோ, பிரதிவாதியின் சாட்சியத்திலோ பிரதிவாதியின் குடும்பத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் அவர்களில் யார் வயலில் இறங்கி வேலைபார்த்த நபர் என்ற எந்த விவரமும் இல்லை. மேலும் வாதி சரண்டர் செய்த காலத்திலிருந்து வழக்குச்சொத்துக்களை வாதி மேற்பார்வையாளராக இருந்து 40 வருடமாக சாகுபடி செய்து வந்ததாக கூறும் பிரதிவாதிகள் சாகுபடி செலவு, விவசாயக்கடன், மானியம், மின்சார செலவு போன்ற பராமரிப்பு செய்ததற்கான எந்த செலவு விவரங்களையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் பி.சா.1 தனது சாட்சியத்தின்போது கீழ்காணுமாறு கூறியுள்ளார்.

<u>பி.சா.1 சாட்சியத்தின் ஒரு பகுதி</u>

"விவசாயத்திற்கு செலவு செய்வதற்காக சாம்பசிவம் பிள்ளையிடம் ஏதாவது கணக்கு வைத்துக்கொண்டோமா என்றால் இல்லை. "

"வழக்குச்சொத்து ஆழ்குழாய் கிணறு என்னிடமோ என் தகப்பனாரிடமோ கணக்கு உள்ளது என்றால் அவ்வாறு கிடையாது. நீதிமன்றத்தில் சாம்பசிவம் பிள்ளை தாக்கல் செய்த ஆவணங்களை மனு செய்து பார்த்தேன். எனக்கோ எனது தகப்பனார் பெயரிலேயோ விவசாயக்கடன் கிடையாது. "

"விடுதலை செய்து கொடுத்த பிறகு அவர் ஏஜெண்டு என்ற முறையில் சாகுபடி செய்து வந்தார். அதன்பிறகு என் தாயார் சாகுபடி செய்து வந்தார். "

"தாவா 5 சர்வே நம்பர்களுக்கும் பக்கத்தில் எங்களுக்காக சாட்சி சொல்ல மாட்டார்கள். தாவா சொத்தில் வயல் நடப்பட்டுள்ள உள்ளதா என்றால் வழக்கு நடப்பதால் நான் போகவில்லை. வாதி தான் யார் யாருக்கோ கொடுத்து சென்று உள்ளார். 30 வருட காலமாக நான் சாகுபடி செய்து உள்ளேன் என்றால் எனக்காக சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள் என்றும், அவ்வாறு சாட்சியம் அளிக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்து வைத்திருக்கிறார் என்றும், வழக்கிற்காக தான் நான் யார் யாரோ நடக்கிறார் என்றால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல."

15. வாதி தரப்பில் சாட்சியமளித்துள்ள வழக்குச்சொத்துள்ள மணவெளி கிராமத்தில் உள்ள நபர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார்.

<u>வா.சா.2 சாட்சியத்தின் ஒரு பகுதி</u>

"நான் மணவெளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதி பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வழக்குச்சொத்து எனக்கு தெரியும், தாவா சொத்துக்கள் ஐந்து இடத்தில் உள்ளது. அந்த இடங்களில் வழங்கு பெயர் ஏரி பிடாரிஆர்ச் நாற்றங்கால், தரிசு, எள்ளுக்கட்டை, ஒட்டுக்கரையான வெட்டி என்பவையாகும். அந்த சொத்துக்களில் ஒவ்வொன்றிற்கும் விஸ்தீரணம் எனக்கு தெரியும். பிரதிவாதிகளின் தகப்பனார் சண்முகத்தை எனக்கு தெரியும். அந்த சொத்துக்கள் எல்லாம் எனக்கு தெரிந்து சாம்பசிவம்பிள்ளை சாகுபடி செய்துவந்தார். 40 வருடமாக அந்த சொத்துக்களின் அனுபவம் வாதியிடம் இருந்துவருகிறது. இடையில் 2 வருடம் சண்முகம் என்பவர் அனுபவித்து வந்தார். 40 வருடத்திற்கு

முன்பு அந்த 2 வருடம் பிரதிவாதியின் தகப்பனாரான சண்மும் அனுபவித்து வந்தார். வாதி அந்த சொத்துக்களை குத்தகை சாகுபடி செய்து வருகிறார். வாதி சொத்தை தவிர அதை சுற்றியுள்ள மற்றவர்களின் சொத்தை பற்றி கேட்டாலும் எனக்கு தெரியும். நான் அந்த கிராமத்தில் பாசனகமிட்டி தலைவராக இருப்பதால் எனக்கு எந்த கிராம சொத்துபற்றி முழுமையாக தெரியும்."

16. வாதி தரப்பில் வாழ்க்கை கிராமத்தின் ஊராட்சிமன்றத்தலைவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வழக்குச்சொத்துக்களை தெரியும் என்றும், தன்னுடைய சொத்துக்கு அருகில் உள்ளதாகவும், வழக்குச்சொத்துக்களை வாதிதான் சாகுபடி செய்து வருவதாக சாட்சியமளித்துள்ளார்.

<u>வா.சா.3 சாட்சியத்தின் ஒரு பகுதி</u>

"வழக்குச்சொத்துக்கள் எனக்கு தெரியும் எனக்கு எந்த சொத்துக்களில் அருகே நிலம் உள்ளது. என்னுடைய நிலத்தையும் பக்கத்தில் உள்ளவர்கள் நிலத்தையும் யார், யார் சாகுபடி செய்கிறார்கள் என்று என்னால் சொல்ல இயலும். நான் விவசாயசங்கத்திலும் தலைவராக இருந்துவருவதால் எனக்கு தாவா கிராமத்தில் சொத்துக்கள் அனைத்தும் தெரியும். எனக்கு வாதியை 35 வருடமாக தெரியும், கடந்த 35 வருடமாக தாவா சொத்துக்களை வாதிதான் சாகுபடி செய்து வருகிறார்."

17. <u>வா.சா.4 சாட்சியத்தின் ஒரு பகுதி</u>

"வாதிக்கு நான் சித்தப்பா ஆவேன். பிரதிவாதிகளுக்கு நான் மாமாமுறை ஆவேன். அவர்கள் என் ஒன்றுவிட்ட சகோதரியின் மகள்கள் ஆவார்கள். வழக்குச்சொத்துக்கள் எனக்கு தெரியும். எனக்கும் தாவா ஊரில் சொத்துக்கள் உள்ளது. தாவா சொத்துக்களுக்கு எள்ளுக்கட்டை பிடாரி, ஆச்சி பிடாரி ஆர்ச், நாற்றங்கால் தரிசு ஆகிய பெயர்கள் உண்டு. அந்த சொத்துக்கள் 40 வருடங்களாக

வாதியின் குத்தகை சாகுபடியில் இருந்துவருகிறது. பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் சண்முகம்பிள்ளை ஆகும். பிரதிவாதிகளின் தகப்பனார் சண்முகம்பிள்ளை 3 வருடங்கள் அந்த சொத்துக்களை வைத்திருந்தார். பின்பு சாம்பசிவம்பிள்ளை தான் குத்தகை சாகுபடி செய்துவருகிறார். சண்முகம்பிள்ளை திருவாரூரில் குடியிருந்து வந்தார்."

18. வா.சா.5ன் சாட்சியத்தின் ஒரு பகுதி

"நான் மணவெளி கிராமத்தில் வசித்து வருகிறேன். அது வாழ்க்கை வட்டத்தை சேர்ந்தது. நான் கிராமபணியாளராக வேலைசெய்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2007ம் வருடம் 6ம் மாதம் வரை நான் கிராமபணியாளராக பணிசெய்தேன். நான் தாவா கிராமத்தில்தான் பணிசெய்தேன். தாவாசொத்து உள்ள இடத்திற்கு பெரியாங்குடி கிராமம் என பெயர் உண்டு. நான் தற்போது அதே கிராமத்தில் தலையாரியாக இருந்து வருகிறேன். எள்ளுக்கட்டை கரணை என்ற ஒரு பகுதியும், பிடாரி ஆச்சி என்ற பகுதியல் 2 இடமும் தரிசு என்பதில் 1 இடமும் உள்ளது. எனக்கு தெரிந்து கடந்த 30 வருடமாக சாம்பசிவம் என்பவரது அனுபவத்தில் தான் தற்போது வரை இருந்துவருகிறது. சாம்பசிவம் பிள்ளையை தவிர வயலில் வேறு யாரும் சாகுபடி செய்யவில்லை."

19. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வழக்குச்சொத்துள்ள பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் அளித்த சாட்சியம் நம்பும்படியும், இயற்கையாகவும் அமைந்துள்ளது. அனைவரும் ஒருமித்து வழக்குச்சொத்து அழைக்கப்படும் பெயர் தற்போதுவரை வாதியைத்தவிர வேறு குத்தகை சாகுபடி செய்யவில்லை என்றே சாட்சியமளித்துள்ளனர். வாதிதரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் வாதி குத்தகைசாகுபடியாளர் என்பது நிரூபணமாகிறது.

20. மேலும் வாதிதரப்பில் குறியிடப்பட்ட வா.சா.ஆ.9 மின்கட்டண அட்டையை பரிசீலனை செய்கையில் வாதியின் பெயரில் அமைந்துள்ளது. மேற்படி ஆவணம் குறித்து வா.சா.5 தமிழ்நாடு மின்சார வாரிய இளநிலை பொறியாளர் பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார்.

"நன்னிலம் தாலுக்கா, வாழ்க்கை வட்டம் பெரியாங்குடி கிராமத்தில் மோட்டார் பம்ப் செட் மின் இணைப்பு புதிய எண்.239, பழைய எண்.262 தற்போதுவரை சாம்பசிவம் பெயரில் உள்ளது. அந்த மின் இணைப்பு சர்வே எண்.131/3ல் உள்ளது. குடவாசல் தாலுக்கா, சீதக்கமங்களம் வட்டம், மின்இணைப்பு எண்.262 பம்ப் செட்டு சண்முகவேல் பெயரில் உள்ளது. மின்இணைப்பு பழைய எண்.286 ஆகும். வா.சா.ஆ.9 மின்கட்டண அட்டை சாம்சிவம் பெயரில் புதிய மின் இணைப்பு எண்.239க்கு உரியதாகும்"

ஆனால் பிரதிவாதி தரப்பில் புல எண்.131/1 -ற்கான மின்இணைப்பு பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ளதாக 1ம் பிரதிவாதி சாட்சியமளித்துள்ளார். அதற்கு சான்றாக பிரதிவாதி தரப்பில் குறியிடப்பட்டுள்ள பி.சா.ஆ.19ஐ பரிசீலனை செய்கையில் இணையதளத்தில் எடுக்கப்பட்ட A.ஷண்முகவேல் என்பவரின் Account summary ஆக உள்ளது. மேற்படி ஆவணம் நம்பகத்தகுந்த ஆவணமாக இல்லை.

21. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.3 சரண்டர் ஆவணம் எழுதி கொடுத்த பிறகு வாதி குத்தகைசாகுபடியாளராக வழக்குச்சொத்தில் இல்லை என்றும், பிரதிவாதிகளின் மேற்பார்வையாளராக வழக்குச்சொத்தினை சாகுபடி செய்து வந்ததாக பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு குத்தகைசாகுபடியாளர் பாதுகாப்பு சட்டம் 1955ன் கீழ் குத்தகை சாகுபடியாளர் என்பது,

(aa) "Cultivating tenant"

(i) means a person who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of any land belonging to another, under a tenancy agreement, ***express or implied***; and

(ii) includes-

(a) any such person who continues in possession of the land after the determination of the tenancy agreement ;

(b) the heir of such person, if the heir contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land;

(c) a sub-tenant if he contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land; or

(d) any such sub-tenant who continues in possession of the land notwithstanding that the person who sublet the land to such sub-tenant ceases to have the right to possession of such land; but

(iii) does not include a mere intermediary or his heir;]

22. வாதி தரப்பில் வழக்குச்சொத்தை சரண்டர் செய்துள்ளதை ஏற்றுக்கொண்டாலும் குத்தகை ஒப்பந்தப்படி சட்டபூர்வமாகத்தான் வழக்குச்சொத்தை சாகுபடி செய்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. அதன்பிறகும் மேற்பார்வையாளர் என்ற முறையில் வாதி சாகுபடி செய்துள்ளார் என்று பிரதிவாதிகளே ஒப்புக்கொண்டுள்ளனர். மேற்படி பிரிவு 2(aa)ன் படியான வரையறையை பார்க்கும்போது "under tenancy agreement express or implied" என கூறப்பட்டுள்ளது. மேற்படி வாதி பிரதிவாதிகளின் உறவானது "implied" என்ற பதத்தின் கீழ் வருகிறது. ஆகவே சட்டப்பூர்வமாக குத்தகை பாதுகாப்பு சட்ட அனுகூலங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது.

23. மேலும் வாதியிடம் வழக்குச்சொத்துக்கு அருகில் உள்ள இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத மூன்றாம் நபர் தாவா சொத்தான குத்தகை சாகுபடி நிலத்தில் பிரச்சினை செய்ததன் காரணமாக வாதி அந்த மூன்றாம்நபர் மீது அப்போது அதிகார வரம்பு உள்ள திருவாரூர் முன்சீப் கோர்ட்டில் அசல் வழக்கு எண்.119/77 என்ற வழக்கிட்டு அதில் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை வாதிக்கு சாதகமாக வழங்கப்பட்டதாக கூறியுள்ளார். மேற்படி வழக்கின் இடைக்கால தடை உறுத்துக்கட்டளை வழங்கியதற்கான உத்தரவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், அசல் வழக்கு எண்.119/1977ன் வழக்கு பதிவேட்டின் நீதிமன்ற சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்ல. எனவே அந்த தீர்ப்பு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்ற பிரதிவாதிகளின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றாலும், மேற்படி தீர்ப்பின் ஆவணங்கள் இவ்வழக்கில் collateral purpose-க்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவற்றின் மூலம் வழக்குச்சொத்தை வாதி 1969ம் ஆண்டு சரண்டர் எழுதிக்கொடுத்ததாக கூறும் காலத்திற்கு பிறகும் குத்தகைசாகுபடி செய்து வந்துள்ளார் என்பதும், வழக்குசொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதாகவும் அறியமுடிகிறது.

24. இவ்வழக்கில் வாதி தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்ட 1985 (1) MLJ 175 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில் ஒரு உழவடை குத்தகைதாரர், தான் குத்தகை உரிமை பதிவேடுகளில் பதிவு செய்யாதது ஒன்றே, குத்தகை சாகுபடியாளர் அல்ல என கருதமுடியாது என கண்டுள்ளது.

1985 (1) MLJ 175 at para 5 page 180

Present :- V.Ratnam. J

G.Natesa Nainar Vs. Sri Karikudinathaswamy Devasthanam, Marutha nallur, Kumbakonam Taluk, represented by its present Executive Officer, K.Anbalagan.

மேற்கண்ட தீர்ப்பின்படி குத்தகைசாகுபடியாளரின் பெயர் Record of tenancy Rights Register-ல் பதிவு இல்லாமல் இருந்தாலும், ஒரு நபர் குத்தகைசாகுபடியாளர்

என்பதற்கான நிபந்தனைகளை பூர்த்திசெய்திருந்தால் போதுமானது என்று கண்டுள்ளது. இவ்வழக்கிலும் வாதி சட்டபூர்வமாக பிரதிவாதியால் குத்தகை சாகுபடிசெய்ய அனுமதிக்கப்பட்டு வாதி cultivating tenant என்பதற்கான விளக்கத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார். எனவே மேற்கண்ட தீர்ப்பின் பொருண்மை இவ்வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

25. வாதி தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்ட

2009-5-L.W.883
M.B.Subramaniam Vs. 1. A.Ramasamy Gounder and 4 others

மேற்படி தீர்ப்பின் பொருண்மை இந்த வழக்கிற்கு பொருந்துவதாக இருந்தாலும், இந்த வழக்கில் முக்கிய பிரச்சினை வாதி குத்தகை சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டப்படி பாதுகாப்பு பெறுவதால், இந்த வழக்கினை வெறும் நிரந்தரதடையுறுத்துக்கட்டளை வழக்கு மட்டுமே என்ற கோணத்தில் பார்க்க இயலாது. மேலும் TamilNadu Cultivating Tenant Act-னையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

26. 1988 (1) L.W. 194
Karuppanna Gounder and 3 others Vs. Ammai Appan

வாதி தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்ட மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின் பொருண்மை விளம்புகை பரிகாரத்திற்கானது. இவ்வழக்கு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தீர்ப்பின் பொருண்மை இவ்வழக்கிற்கு பொருந்தாது.

27. பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டி கீழ்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகள் வாதிடப்பட்டுள்ளன.

1. (2012) 3 L.W. Page 111 50 130

*Maria Margadia Sequeria Fernandes and others Vs..*

*Erasmo Jack De Sequeria (D) Tr. Lrs. and others*

இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வாதி வழக்குச்சொத்தின் மேற்பார்வையாளர் மட்டுமே என்பது நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே மேற்கண்ட தீர்ப்பின் பொருண்மை இவ்வழக்கிற்கு பொருந்தாது.

28. 2013 (1) (CTC) Page 180 to 192

N.Balu Vs. S.Shanmugam, 2. Narayanasamy 3. A.Velu Udayar

மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் பொருண்மை இவ்வழக்கிற்கு பொருந்தாது.

29. 2003- 3 (L.W.) Page 74 to 76

Subbiah Pillai (died) and others Vs. M.A.Thirunavukkarasu Pillai (died) and others (R.Banumathi.J.)

2013 – 4 (MLJ) Page 502 to 507

S.R.Kaliappan Vs. District Revenur Officer, Coimbatore and others.

இவ்வழக்கில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட குத்தகைசாகுபடிக்கான ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்குச்சொத்தின் மீதான அனுபவம் வாய்மொழியாகவும், ஆவணங்கள் மூலமும் வாதியால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் பொருண்மை இவ்வழக்கின் பொருண்மைக்கு பொருந்தாது.

30. (2003) 1. MLJ Page 447 to 451

Jesudoss Vs. Sebastian (died) and others.

இவ்வழக்கில் வழக்குச்சொத்தின் சுவாதீனம் பிரதிவாதிகளிடம் இருந்ததாகவும், வாதியிடம் வழக்குச்சொத்தை மேற்பார்வை செய்ய ஒப்படைத்ததாகவும் கூறுவது பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் பொருண்மை இவ்வழக்கிற்கு பொருந்தி வரவில்லை.

31. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் வாதி குத்தகைசாகுபடியாளர் பாதுகாப்புச்சட்டத்தின் பலன்களை பெறத்தக்கவர் என கூடுதல் எழுவினா 3 தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் ஒருவர் குத்தகைசாகுபடியாளர் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டால் அவ்வழக்கானது Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 பிரிவு **6-A**-ன் கீழ் நீதிமன்றம் தீர்வு காண தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சட்டம் பிரிவு **6-A**-ன் கீழ் வழிமுறைகளை எடுத்துக்கொள்கிறது.

**[6-A, Transfer of certain suits to Revenue Divisional Officer by Civil Courts.** - If in any suit before any Court for possession of, or injunction in relation to any land, it is proved by affidavit or otherwise that the defendant is a cultivating tenant entitled to the benefits of this Act, **the Court shall not proceed with the trial of the suit but shall transfer it to the Revenue Divisional Officer** who shall thereupon deal with and dispose of it as though it were and application under this Act and shall all the provisions of this Act shall apply to such an application and the applicant.

பிரிவு **6-A**ல், பிரதிவாதி குத்தகைசாகுபடியாளர் என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் மேற்படி வழக்கினை உடனடியாக இந்த சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள RDO நீதிமன்றத்திற்கு வழக்கினை மாற்றம் செய்யவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்

2011 (3) MLJ 198 (Mad), 2010(1) LW 541(Mad)]

Balu  Pillai @ Balasubramanian Pillai VS.Mahadevan.

என்ற வழக்கில் கீழ்காணுமாறு கூறியுள்ளது.

**Jurisdiction of Civil Court:-** Civil Court has got jurisdiction to decide the relationship of the parties to the suit, as to whether they are cultivating tenants within the scope of the Act. "***Once the Court comes to the conclusion that a person is a cultivating tenant and is entitled to the protection of the Act,"*** immediately the Civil Court ceases to have any jurisdiction to decide the suit. However if the Civil Court comes to the conclusion that the party is not cultivating tenant and not entitled to the benefits under the Act, the Court can entertain the suit filed by the land lord.

இவ்வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் "persons" என்ற பதத்தினை பயன்படுத்தியுள்ளது. "***Once the Court comes to the conclusion that a person is a cultivating tenant and is entitled to the protection of the Act,"*** மேற்படி நபர் (person) என்ற பதமானது வாதி, பிரதிவாதி இருவரையும் குறிப்பிடும் வகையில் பொதுவாக உள்ளது. எனவே இருதரப்பினர்களில் யார் மேற்படி குத்தகைசாகுபடியாளர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 2(aa)-ன் கீழ் குத்தகை சாகுபடியாளர் (Cultivating Tenant) என்ற வரையறையில் வந்தாலும், மேற்படி சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது.

மேலும் பிரிவு 6-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**Bar of Jurisdiction of Civil Courts -**

No Civil Court shall, except to the extent specified in Section 3(3), have jurisdiction in respect of any matter which the Revenue Divisional Officer is empowered by or under this Act to determine and no injunction shall be granted by any Court in respect of any action taken or to be in pursuance of any power conferred by or under this Act.

மேலும் பிரதிவாதி தரப்பில் மேற்படி வழக்கினை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்று வாதம் முன்வைக்கப்பட்டதன் அடிப்படையிலும் வாதி குத்தகைசாகுபடியாளர் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கானது Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 பிரிவு **6-A**ன் கீழ் மாவட்ட வருவாய் கோட்ட அலுவலருக்கு (**Revenue Divisional Officer)** மாற்றம் (Transfer) செய்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி எழுவினா 1 மற்றும் கூடுதல் 3 தீர்மானிக்கப்படுகிறது.

32. <u>எழுவினா 2</u>

வாதிக்கு வேறு எந்தப்பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2 தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக,

வாதி குத்தகைசாகுபடியாளர் என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வழக்கினை Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 பிரிவு **6-A**ன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் கோட்ட அலுவலருக்கு (**Revenue Divisional Officer)** வழக்கு மாற்றம் (Transfer) செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ஆம் நாளில் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

1.வாதி தரப்பு சாட்சிகள் :-

| | | |
|---|---|---|
| வா.சா.1 | திரு. சாம்பசிவம் | வாதி |
| வா.சா.2 | திரு.பக்கிரிசாமி | |
| வா.சா.3 | திரு.மணி | |
| வா.சா.4 | திரு.சச்சிதானந்தம் | |
| வா.சா.5 | திரு.சுப்பையன் | |
| வா.சா.6 | திரு.ஜி.பாலாஜி | |
| வா.சா.7 | திருமதி. ராஜேஸ்வரி | |

2) வாதி தரப்பில் குறிக்கப்பட்ட சான்றாவணங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.06.1973 | குத்தகைப்பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 12.07.1977 | திருவாரூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.119/77ல் இடைமனு எண்.614/77ன் உத்தரவு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | --- | திருவாரூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.119/77ன் , வழக்குப்பதிவேடு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 28.02.1976 | வாதிக்கு, ஷண்முகம் என்பவர் நெல் அளந்ததற்காக கொடுத்த ரசீது | அசல் |
| வா.சா.ஆ.5 | 23.04.2010 | கிஸ்தி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | --- | வாதி பெயரில் உள்ள விவசாயக்கடன் அட்டை | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.7 | 27.09.2013 | வட்டாட்சியரின் பதில் அறிவிப்பு | அசல் |
| வா.சா.ஆ.8 | 19.04.2000 | ஷண்முகம்பிள்ளையின் இறப்புச்சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.9 | --- | வாதியின் பெயரில் உள்ள மின்கட்டண அட்டை | அசல் |
| வா.சா.ஆ.10 | ---- | வாதியின் பெயரில் உள்ள மின்கட்டண அட்டை | அசல் |
| வா.சா.ஆ.11 | --- | வாதி பெயரில் உள்ள மின்கட்டண Account Summary | கணினி நகல் |
| வா.சா.ஆ.12 | 11.03.2013 | உயில் ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.13 | --- | வாதியின் வழக்கறிஞர் நன்னிலம் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், வாழ்க்கை ஆகியோருக்கு அனுப்பிய அறிவிப்பு | கை நகல் |
| வா.சா.ஆ.14 | .... | அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |

3) <u>பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-</u>

| | | |
|---|---|---|
| பி.சா.1 | திருமதி.தர்மதேவி | 2ம் பிரதிவாதி |
| பி.சா.2 | திரு.செல்வகுமார் | |

4) <u>பிரதிவாதிகள் தரப்பில் குறிக்கப்பட்ட சான்றாவணங்கள் :-</u>

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 15.02.1968 | ஷண்முகம்பிள்ளைக்கு சாம்சிவம் பிள்ளை எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டில் உள்ள எழுதியவரின் கையெழுத்து | அசல் |
| பி.சா.ஆ.2 | 11.05.1969 | ஷண்முகம்பிள்ளைக்கு சாம்சிவம் பிள்ளை | அசல் |

| | | | |
|---|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டு | |
| பி.சா.ஆ.3 | 12.07.1969 | வாதி எழுதிக்கொடுத்த சரண்டர் பத்திரம் | அசல் |
| பி.சா.ஆ.4 | 15.02.1968 | 15.02.1968ம் தேதியிட்ட குத்தகைச்சீட்டில் உள்ள வாதியின் கையொப்பம் | அசல் |
| பி.சா.ஆ.5 | 15.02.1968 | 15.02.1968ம் தேதியிட்ட குத்தகைசீட்டு | அசல் |
| பி.சா.ஆ.6 | 12.04.2013 | பட்டா எண்.602ற்கான சிட்டா நகல் | அசல் |
| பி.சா.ஆ.7 | 12.04.2013 | பட்டா எண்.196ற்கான சிட்டா நகல் | அசல் |
| பி.சா.ஆ.8 | 12.04.2013 | அடங்கல் பதிவேட்டு நகல் | அசல் |
| பி.சா.ஆ.9 | 05.11.2013 | நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 2ம் பிரதிவாதியின் மனு | ஜெராக்ஸ் நகல் |
| பி.சா.ஆ.10 | --- | அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| பி.சா.ஆ.11 | 21.02.2014 | மாவட்ட ஆட்சியருக்கு பதிவு தபாலில் அனுப்பிய கடிதம் அதற்கான பதிவு அஞ்சல் ரசீது | அசல் |
| பி.சா.ஆ.12 | --- | அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| பி.சா.ஆ.13 | 13.06.2014 | வட்டாட்சியர் அனுப்பிய 2ம் பிரதிவாதிக்கு சார்வு செய்த மேலெழுத்து | சார்வு நகல் |
| பி.சா.ஆ.14 | 02.04.2014 | வில்லங்க சான்று | அசல் |
| பி.சா.ஆ.15 | 16.04.2014 | சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று | அசல் |
| பி.சா.ஆ.16 | 02.04.2014 | சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.17 | 16.04.2014 | சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று | அசல் |
| பி.சா.ஆ.18 | 16.04.2014 | சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று | அசல் |
| பி.சா.ஆ.19 | --- | ஏ.ஷண்முகவேல் என்பவர் பெயரில் உள்ள மின் இணைப்பு எண்ணின் Account summary குறித்து இணையதளத்தில் எடுக்கப்பட்ட நகல் | கணினி நகல் |
| பி.சா.ஆ.20 | --- | ஷண்முகவேலு என்பவரின் பிரஞ்சு மொழியில் உள்ள பிறப்புச்சான்றிதழ் | அசல் |
| பி.சா.ஆ.21 | 10.08.2013 | ஷண்முகவேலு என்பவரின் பிரஞ்சு மொழியில் உள்ள பிறப்புச்சான்றிதழுக்கு நோட்டறிபப்ளிக் வழங்கிய தமிழாக்கம் | அசல் |

5) <u>சாட்சித்தரப்பு சான்றாவணங்கள்</u> :- - இல்லை -

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், நன்னிலம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நன்னிலம்.

**முன்னிலை :- திரு.எம்.ஜெகதீசன், பி.எஸ்ஸி, எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், நன்னிலம்.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ஆம் நாள் புதன்கிழமை.

திருவள்ளுவராண்டு 2050, விளம்பி வருடம் தைத்திங்கள் 23-ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.50/2013**

நன்னிலம் டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, சேங்கனூர் அஞ்சல் மணவெளி கிராமத்தில் மெயின் ரோட்டுத்தெருவில் வசிக்கும் சுந்தரேசம்பிள்ளை குமாரர் சாம்பசிவம் பிள்ளை (வயது 72)

... வாதி

// எதிர் //

1. காரைக்கால் டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, திருநள்ளாறு அஞ்சல் மற்றும் கிராமத்தில், 26 தெற்கு தெருவில் வசிக்கும் திரிபுரசுந்தரம் மனைவி அரவிந்தம் (வயது 70)
2. மேற்படி கிராமத்தில், 24 தெற்கு தெருவில் வசிக்கும் குலசேகரன் மனைவி தர்மதேவி (வயது 65)
3. நாகப்பட்டிணம் டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, நாகூர் கிராமத்தில், 20 சிவன் தெற்கு தெருவில் வசிக்கும், சிங்காரவேலு மனைவி கனகரெத்தினம் (வயது 62)

.... பிரதிவாதிகள்

வாதியின் குத்தகை சாகுபடி அனுபவத்தில் உள்ள வழக்குச்சொத்தில் வாதியின் அனுபவம் சட்டப்படியாக நீக்கப்படும் நாள்வரையில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென ஒரு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடக்கோரியும், வழக்கிற்குண்டான செலவுத்தொகை கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் 18.04.2013

வழக்குமூலம் 10.06.1973, 14.04.2013 ஆகிய தேதிகளில் வாழ்க்கை வட்டம், பெரியாங்குடி கிராமத்தில் உற்பத்தி.

**பொருமான விபரம்**

வாதி கோரும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளைக்கு

வழக்கு மதிப்பு ரூ.1000

நீதிமன்றக்கட்டணமாக 27 சி-ன் கீழ் செலுத்தப்படும் தொகை ரூ.75.50

இவ்வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 25.12.2019ஆம் தேதியன்று வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.பாரி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் கேட்கப்பட்ட வாதுரைகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனைசெய்தும், இதுநாள்வரையில் என் சீரிய பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்....

**//தீர்ப்பாணை//**

1.வாதி குத்தகைசாகுபடியாளர் என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வழக்கினை Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 பிரிவு **6-A**ன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் கோட்ட அலுவலருக்கு (**Revenue Divisional Officer)** வழக்கு மாற்றம் (Transfer) செய்யப்படுகிறது.

2. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பு செலவுத்தொகையான ரூ.906/-ஐ பிரதிவாதிகளே ஏற்றுக்கொள்ளவேண்டும்)

**சொத்து விபரம்**

நன்னிலம் டி.மு.இலாக்கா, நன்னிலம் தாலுக்கா, வாழ்க்கை வட்டம் பெரியாங்குடி கிராமத்தில் அளவாகியுள்ள

| வ.எண் | புல எண். | வகைபாடு | விஸ்தீரணம் ஏக்கர் செண்ட் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 131/1 | நஞ்சை | 2.10 | பூரா |
| 2. | 131/5 | நஞ்சை | 0.31 | பூரா |
| 3. | 148/2 | நஞ்சை | 0.64 | பூரா |
| 4. | 148/10 | நஞ்சை | 0.26 | பூரா |
| 5 | 111/3 | நஞ்சை | 0.33 1/3 | பூரா |
| | | கூடுதல் | 3.64 1/3 | |

**செலவுத்தொகை விவரம்**

| வ.எண். | வாதி தரப்பு | ரூ. | பை. | பிரதிவாதிகள் தரப்பு | ரூ | பை. |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | வக்காலத்து | 05 | 00 |
| 2. | | | | எதிர்வழக்குரை தயாரிப்பு செலவு | 100 | 00 |
| 3. | | | | தட்டச்சு | 100 | 00 |
| 4. | | | | மனுக்களில் முத்திரை | 25 | 00 |
| 5. | | | | ஆவணங்களில் முத்திரை | 10 | 00 |
| 6. | | | | வழக்கறிஞர் ஊதியம் (சீனியர் | 500 | 00 |
| 7. | | | | வழக்கறிஞர் ஊதியம் (ஜூனியர்) | 166 | 00 |
| | | | | கூடுதல் | 906 | 00 |

இன்று 2019ஆம் தேதியன்று பிப்ரவரி திங்கள் 06ஆம் நாளில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நீதித்துறை நடுவர், நன்னிலம்.